பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

மடல்: 5 பிரசோற்பத்தி ஹூ சித்திரை மீ 17 உ செவ்வாய்க்கிழமை [30-04 1991] UTHAYAN—A Lively National Tamil Daily மலர்: 147

# நானாட்டான் தாக்குதலில் 60 ராணுவத்தினர் உயிரிழப்பு!

## இரு படை அணிகள் முற்றாக அழிந்தன

யாழ்ப்பாணம், ஏப்ரல் 30

நேற்றுக்காலை மன்னார் நானாட்டான் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் ஒன்றில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அறுபது பேருக்கு மேல் உயிரிழந்தனர்.

சுமார் 12 நிமிட நேரம் மட்டுமே நீடித்த இந்தத் தாக்குதலில் இராணுவப் படையின் இரு அணிகள் (இரண்டு பிளட்டூன்கள்) முற்றாக அழிந்தன; பெருமளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

நேற்றுக் காலை 7.47மணியளவில் நானாட்டான் பகுதியில் இருந்து வங்காலை நோக்கி ரோந்து சென்று கொண்டிருந்த அரசுப் படையினர் மீது, நானாட்டானில் இருந்து ஒரு மைல் தொலைவில் உள்ள வஞ்சியன்குளப் பகுதியில் வைத்து இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதல் நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் 2 ஆவது லெப்டினன்ட் கோணேஸ் [பிரான்ஸில் சிவகுமார்-கொழும்பு], றோயன் [மன்னார்] ஆகிய இரு போராளிகளும் வீரமரணமடைந்தனர்.

[3 ஆம் பக்கம் பார்க்க]

### அள்ளப்பட்ட ஆயுதங்கள்

நானாட்டான் தாக்குதலில் விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

★ ஏ. கே. எல். எம். ஜி. ரகத் துப்பாக்கி — 4
★ ரி 56-2ரகத் துப்பாக்கி—22
★ ரி 81 ரகத் துப்பாக்கி —18
★ ஆர். பி. ஜி. — 2
★ 60 எம். எம். மோட்டார் — 2
★ ரி 56 பட் மொடல் துப்பாக்கி — 1
★ ஜே. ஆர். ரக கிரனேட் —57
★ ஏ. கே. எல். எம். ஜி றம் மகஸின் —17
★ ரி 56 மகஸின் —75
★ ரி 81 மகஸின் —73
★ ஆர். பி. ஜி. ஷெல் — 5
★ 60 எம். எம். மோட்டார் ஷெல் —12
★ ஏ. கே. எல். எம். ஜி. ரவைக் கோர்வை — 1,575
★ 7.62 நடுத்தர ரவைகள் — 10ஆயிரத்து 600
★ ஆர்.பி ஜி. புறொப்லர்—5
★ தொலைத் தொடர்பு சாதனம் —1

[உ-எ]

### சு. க. எம்.பி தாக்கப்பட்டார்

கொழும்பு. ஏப். 30

இனந்தெரியாத கோஷ்டி ஒன்றினால் தாக்கப்பட்ட— பொலன்னறுவை மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பி மைத்திரிபால சிரிசேனாவும் அவரது சாரதியும் காயங்களுடன் பொலன்னறுவை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். [உ-எ]

### ஆனையிறவில் படைக்கு வான் மூலமே விநியோகம்

கொழும்பு. ஏப். 30

ஆனையிறவு முகாமில் உள்ள படையினருக்கு விமானம் மூலமாகவே உணவு ''சப்ளை'' இடம்பெற்று வருவதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் கூறியதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் விடுதலைப் புலிகள் பதுங்கு குழிகளை அமைத்து வருவதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

### மேலும் ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப்.30

கடந்த சனியன்று ஆனையிறவுப் பகுதியில் மோதல் நிகழ்ந்த இடங்களிலிருந்து மேலும் பல ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

ரி 56-1 ரக துப்பாக்கி-1, ஐ. எம் ரவைகள்- 1,200, ரி . 81 மகஸின்-12, ஆர் .பி. ஜி ஷெல் - 4, 60 எம் எம் மோட்டார் ஷெல் - 6 என்பனவே மீட்கப்பட்டன.

இதேவேளை—

இந்த மோதல் சம்பவத்தில் காயமுற்ற விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான சுவித் [சுப்பிரமணியம் -கிளிநொச்சி] ஞாயிறு வீரமரண மடைந்தார். [இ]

### 18 புலிகளின் புகழுடல்கள் ஞாயிறன்று தீயுடன் சங்கமம்

ஆனையிறவுப் பகுதியில் கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெற்ற சண்டைகளில் வீரமரணமடைந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் 18 பேரினதும் புகழுடல்கள் கடந்த ஞாயிறு இரவு 10 மணியளவில் தீயுடன் சங்கமமாகின.

புகழுடல்கள் கிளிநொச்சியில் பல இடங்களிலும் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டன. பின்னர் இராணுவ மரியாதைகளுடன் கிளிநொச்சி மாவீரர் மயானத்தில் அவை வைக்கப்பட்டிருந்த சிதைக்குத் தீ மூட்டப்பட்டது.

போராளிகளின் மறைவை ஒட்டி, கிளிநொச்சிப் பகுதி எங்கும் கடைகள் மூடப்பட்டு, கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டு, துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

[உ-எ]

## ஊரடங்கைக் காரணம் காட்டி அரசாங்க ஊழியர்கள் வேலைக்கு வருவதில்லை!

ஊரடங்கு உத்தரவைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்தில் பெரும்பாலான திணைக்களங்களில் ஊழியர்கள் வேலைக்கு சமுகமளிப்பதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பொதுமக்கள் பல அரச அலுவலகங்களுக்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்பினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில்—

யாழ். செயலகத்தைச் சேர்ந்த சகல ஊழியர்களையும் இன்று வேலைக்கு சமுகமளிக்குமாறு யாழ். பதில் அரச அதிபர் திரு. எஸ். சண்முகநாதன் கேட்டுள்ளார்.

[உ-8]

## கிழக்கில் 3 படையினர் பலி!

யாழ்ப்பாணம், ஏப் 30

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஞாயிறன்று இரவு 36 ஆம் கிராமம் முகாமிலிருந்து 19ஆம் கட்டை முகாமுக்கு வாகனம் ஒன்றில் சென்ற நான்கு இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

19ம் கட்டை முகாமிலிருந்து சுமார் 500 யார் தூரத்தில் வைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் உயிரிழந்தனர். நான்காவது நபர் தப்பி ஓடிவிட்டார்.

இத்தாக்குதலில் ரி56 1 ரக துப்பாக்கி 2, ரி 56 - ரகத் துப்பாக்கி 1, ஐ எம் ரவைகள்-60 என்பன புலிகளால் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. [உ]

## காணாமற்போன 2,000 பேர் பற்றி ஸ்ரீலங்கா அரசிடம் விளக்கம் ஐ. நா. குழு கேட்கிறது

கொழும்பு, ஏப். 30

ஸ்ரீலங்காவில் காணாமற் போனதாகக் கூறப்படும் 2 ஆயிரத்து 182 பேர் பற்றி ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுவின் செயற்குழு அரசிடம் விளக்கம் கோரியுள்ளது.

1990 இறுதி வரை 241 பேர் பற்றிய விவரங்களையே கொழும்பு அரசு அனுப்பி வைத்தது என்று ஐ. நா. செயற்கமிட்டி தெரிவித்துள்ளது.

காணாமற் போனவர்களில் 42 பேர் பற்றிய விவரங்களை மட்டுமே தம்மால் விவரமாகச் சேகரிக்க முடிந்ததாகவும் செயற்குழு மேலும் தெரிவித்து உள்ளது. [உ-எ]

## நீதிமன்றில் காமினி ஆஜர்

கொழும்பு, ஏப் 30

பேராசிரியர் ராஜ்ப் புல்ஜின்ஸ் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா உட்பட ஒன்பது சந்தேக நபர்கள் கடந்த வெள்ளிக்கிழமை கல்கிசை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அக்கடத்தல் சம்பவம்

[3 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



ஊரடங்குச் சாட்டிலை ஒய்வு எடுக்க நினைச்சிருப்பினம் ... ... !

## உத்வேகமும் எழுச்சியும் பொங்க யாழ்ப்பாணத்தில் மேதின விழா

யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மே தினத்தை எழுச்சியுடனும் புதிய உத்வேகத்துடனும் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகிவிட்டன.

கிராமம் என்றும் நகரம் என்றும் வேறுபாடு இன்றி அவ்வப்பகுதி மக்கள் மேதின நிகழ்ச்சிகளுக்கான ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

வீதிகள் தோறும் பிரமாண்டமான பந்தல்களும், வளைவுகளுமாக குடாநாடு எழில் பூத்து நிற்கிறது.

நாளை காலை 9 மணிக்கு மருதனார்மடத்தில் இருந்து ஆரம்பமாக இருக்கும் எழுச்சிப் பேரணியில் உழைக்கும் மக்கள் பல்லாயிரக் கணக்கில் கலந்துகொள்ள இருக்கின்றனர்.

விவசாயம், கடற்றொழில், சிறுதொழில் வர்த்தகம் கூட்டுறவு அரசாங்கத்துறை ஆகிய துறைகளில் உழைக்கும் சகல தரப்புத் தொழிலாளர்களும் பேரணியில் கலந்துகொள்ள ஆயத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு தரப்பட்ட தொழிலாளரும் தத்தமது அமைப்பின் பெயரில் பதாகைகளை தாங்கிச் செல்வர். அத்

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கடைத் தேவைக்கு பாவிக்கக்கூடிய நல்ல நிலையிலுள்ள இரு பெரிய தேக்கு கண்ணாடி அலுமாரிகள் [Showcase] உடன் விற்பனைக்குண்டு. S. சண்முகநாதன், 562, ஆஸ்பத்திரி வீதியில் தொடர்பு கொள்ளவும். [16622]

## மணமகன் தேவை

இந்து 7 இல் செவ்வாய் ராகு சனி உள்ள பெண்ணுக்கு பொருத்தமுடைய செவ்வாய் உள்ள பட்டதாரி மணமகன் தேவை. பெண் 5' 4'' உயரம் Fair in Complexion இல-305, C/o உதயன் யாழ்ப்பாணம்.
[16501]

## தவறிவிட்டது

கேரதீவிலிருந்து யாழ். வரும் வழியில் தேசிய அடையாள அட்டை, வேலை அடையாள அட்டைகள், மூக்குக் கண்ணாடி, சிறு தொகைப் பணத்துடன் கூடிய பேர்ஸ். மற்றும் சில பொருள்களும் கொண்ட வெள்ளை முடிச்ச பாக் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து S. F. சேவியர், 88/BAD/5, பாலசிங்கம் விடுதி, யாழ். பல்கலைக்கழகம் என்ற முகவரியில் அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [16632]

## ஆங்கில வகுப்புகள்

ஆங்கில மொழியை சரளமாகக் கதைக்க விரும்பும் மாணவர்களுக்கு அவரவர்களின் தராதரத்திற்கேற்பவும், வசதிகளுக்கேற்பவும் குறைந்த கட்டணத்தில் கூடிய விளக்கத்துடன் கற்பிக்கப்படுகிறது. By Manjula Balasingam 21/2, அம்மன் வீதி. கந்தர் மடம், யாழ்ப்பாணம்.
[16527]

## A/L கணக்கியல் கோட்பாடுகள்

A/L கணக்கியல் கோட்பாடுகள் வெளிவந்துவிட்டது. ஆக்கியோன் N. ராஜன் B. Com விலை 25/- கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, பிறவுண் கல்வி நிலையம் [4085]

## வகுப்புக்கள்

Pitmans [London] ஆங்கில Short-Hand & Typing வகுப்புக்கள் 1 - 5 - 1991 இல் ஆரம்பமாகின்றன. School of Business Administration 16, 3 rd Cross Street, Jaffna.
[இ-4905]

# தொழிலக வேலை பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 30

யாழ் போதனா வைத்தியசாலை முறிவு-நெரிவு ஒட்டுத் தொழிலகத்தின் அனைத்து வேலைகளும் ஸ்தம்பிதமடைந்த நிலையில் உள்ளன.

தொழிலக வேலைகளுக்குத் தேவையான அத்தியாவசிய மூலப்பொருள்கள் முடிவடையும் தறுவாயில் இருப்பதே இதற்குக் காரணம்.

தேவைப்படும் மூலப்பொருள்களைக் கொழும்பிலிருந்து வரவழைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் இதுவரை வெற்றி அளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இத்தொழிலகத்தில் உள்ள பயிற்சி பெற்ற சில ஊழியரும், சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வுபெற்றுச் சென்றுள்ளனர். [இ-15]

# மூன்றாம் ஆண்டு நினைவு நாள்



## லெப். சாள்ஸ்
### [குமாரகுலசிங்கம் வேலவன்]

மண்ணில் மலர்வு: 31-07-1967
விண்ணில் உயர்வு: 30-04-1988

வேலவனே சாள்ஸ் என்ற பெயரெடுத்து
வீரவேங்கையாய் சென்றாய் தமிழ் ஈழத்தின்
சிலமிகு வெற்றிக் கொடி பிடிக்க நின்றாய்
சீர் படைத்த போர் புரிந்து சொர்க்கம் கண்டாய்
ஞாலமதில் தாய் சகோதரர்கள் மைத்துனர்கள்
நண்பர்களை மறந்தாலும் தமிழீழத்தின்
கோலமதைக் காணும் நெஞ்சம் கொண்டு சென்றாய்
குளிர்நிலே நீ தமிழ்த் தாய் மடிமேல் வாழி.

தாய், சகோதர, சகோதரிகள்,
மைத்துனர்கள், குடும்பத்தினர்.
[16625]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் குணவதி கந்தப்பு (பாப்பா)

தோற்றம்: 05 - 04 - 1958
மறைவு: 31 - 03 - 1991

31-03-1991 ஞாயிற்றுக்கிழமை காலமான எங்கள் புத்திரியினதும், சகோதரியினதும் 31 ஆம் நாள் ஆத்ம சாந்திக் கிரியைகள் இன்று [30-04-1991] செவ்வாய்க்கிழமை எங்கள் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னாரின் நினைவாக நடைபெறும் மதிய போசனத்தில் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

பெற்றோர், சகோதரர்கள்.

75 [109], அரசடி வீதி,
யாழ்ப்பாணம். [16595]

# முதலாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



வேலணை கிழக்கு

## செல்வி சரண்யா மாணிக்கவாசகர்

பேருவகையூட்டி மலர்ந்தது: 26 - 09 - 1985
பேரிடி தந்து உதிர்ந்தது: 30 - 04 - 1990
திதி: 19 - 04 - 1991

ஈன்றவர் நெஞ்சில் இடியது வீழ்ந்தன்
இமையது மூடியதா? உனைப்
போன்றவர் பிறந்து பேசியாய் மகிழ்ந்து
போவது நீதியதா? உலகில்
மாண்டவர் மீண்டும் வருவதி[ல்]லை எனும்
மரபது மாறியதா? மகளே
ஆண்டது ஓடி மறைந்தது நீ போய்
அவலம் தீர்ந்ததுவா? - எம்
அழுகை ஓய்ந்ததுவா?

வேதனைத் தீயில் வெந்து துடிக்கும்,
உன் பிரியமுள்ள
அப்பா, அம்மா, தம்பி, உறவினர்கள்.

அரசினர் விடுதி,
ஆஸ்பத்திரி வீதி, மன்னார். [4041]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில்:
20 - 09 - 1911



ஆண்டவன் அடியில்:
01 - 04 - 1991

அமரர்

## சீனிவாசகம் சின்னத்தம்பி

அன்பின் அருவியாய், பாசத்தின் பிறப்பிடமாய்,
பண்பில் சிகரமாய், குடும்பத்தின் குலவிளக்காய்,
எம்மை வளர்த்தெடுத்த ஐயாவே - எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்ட ஒளிவிளக்கே!

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

01-05-1991 [புதன் கிழமை] அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளில் பங்குபற்றுவதோடு மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாருக்கு போதனா வைத்தியசாலையில் சேவையாற்றியவர்களுக்கும், இறுதிச் சடங்குகளில் பல வழிகளிலும் உதவிய சகலருக்கும், எமது துயரத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி!

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள்,
உற்றார், உறவினர்கள்.

''இந்திர வாசா''
கொக்குவில் கிழக்கு.
கொக்குவில். [16562]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## அவர்களுக்கு உதவுதல்

தீவுப்பகுதியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக எண்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் யாழ்ப்பாண நகருக்கும் அதனை அண்டிய பகுதிகளுக்கும் இடம்பெயர்ந்துள்ளனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அவர்களில் பெரும்பாலானவர்கள் அகதிகளாகத் தற்காலிக முகாம்களில் தங்கி இருக்கிறார்கள். குறைந்த எண்ணிக்கையினரே உறவினர்களுடன் கூடியிருக்கச் சென்றிருக்கிறார்கள்.

மிகப்பெரும் எண்ணிக்கையான மக்களை அகதிகளாக வைத்துப் பராமரிக்க வேண்டிய பெரும் பொறுப்புத் தங்களைச் சேர்ந்திருக்கிறது என்பதனை நகர மக்கள் மனதில் கொள்ள வேண்டும். அகதிகளுக்கு வேண்டிய உதவிகளையும், வசதிகளையும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில், சீராகச் செய்யும் பொறுப்புத் தங்களுடையது என்பதனைச் சமூக நல இயக்கங்கள் மறந்துவிடலாகாது.

அகதிகளைப் பராமரிப்பதும், அவர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுப்பதும் இலகுவான காரியங்கள் அல்ல. மன விருப்பத்துடன், நேர்மை, கண்ணியம், பாரபட்சமின்மை, ஊழல் - மோசடியின்மை என்பனவற்றைக் கலந்து உண்மையான தொண்டு நோக்கத்துடன் செய்யப்பட வேண்டியவை.

உணவு, உடை மற்றும் சுகாதாரத்தைப் பேணுவதற்கான மருந்து வகைகள் என்பவற்றுக்குப் பற்றாக்குறையும் தட்டுப்பாடும் நிலவும் இந்த நெருக்கடியான வேளையில், அகதிகளைப் பராமரித்து ஆதரவளிப்பது என்பது பெரும் சிரமங்கள் நிறைந்த ஒன்று. அரசாங்க, நிர்வாக இயந்திரத்தின் வளங்கள் வேண்டும் என்றே தமிழ்ப் பகுதிகளுக்கு ஒட்ட நறுக்கப்பட்டு விட்டன; அதனால் தீவுப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்துள்ள மக்களுக்குரிய உதவியையும், ஆதரவையும் மக்களும், அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களுமே கூட்டாக நல்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

ஆகையால், இடம் பெயர்ந்தவர்களைப் பராமரிப்பதை, விரும்பினால் உதவுதல், இல்லையேல் தூர விலகிக் கொள்ளுதல் என்று நினைக்காமல், கட்டாய கடமை என்று மக்கள் ஒவ்வொருவரும் கருத வேண்டும். அடுத்தவர்கள் வந்து உதவி தருமாறு கேட்கும் வரை காத்திருக்காமல், தாமாகவே ஆதரவு நல்க முன்வர வேண்டும். மற்றவர்களிடம் மனிதாபிமானத்தை எதிர்பார்ப்பதற்கு முதலில், நாம் மனிதாபிமானத்துடன் நடந்துகொள்ளப் பழகுவது அவசியம்.

இத்தனை ஆயிரம் மக்களுக்கும் உணவளிப்பதற்கும், தங்குமிட மற்றும் சுகாதார வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும் திட்டமிட்ட முறையிலான ஒழுங்கமைப்புகளும், செயல் நடவடிக்கைகளும் தேவை. எழுந்தமானத்தில் ஒவ்வொருவரும் தாம் நினைத்ததைச் செய்ய முனையக்கூடாது. இடம் பெயர்ந்து வந்த மக்களின் நலனை முன்னிறுத்தி, அலுவல்களை முறையாகவும், முழுமையாகவும் ஒழுங்கு சீர்படுத்தியும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் இணையம் இது விடயத்தில் கவனமாக இருந்து, தனது பணியைச் சீராகவும், குற்றம் குறை வராமலும் செயலாற்றும் என எதிர்பார்க்கிறோம்; நம்புகிறோம்.

## 3 இலங்கையர் கைது

கொழும்பு, ஏப். 30

போலி பயண தஸ்தாவேஜுகளைக் காட்டி சிங்கப்பூர் பயணமாக முயற்சித்த ஒரு பெண் உட்பட மூன்று இலங்கையர் சென்னை விமான நிலையத்தில் வைத்து பாதுகாப்பு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டனர்.

## பலியானோர் 27 ஆக உயர்வு

கொழும்பு, ஏப். 30

ஆனையிறவு முகாம் மீது கடந்த சனியன்று இடம் பெற்ற தாக்குதலில் உயிரிழந்த அரசுப் படையினரின் எண்ணிக்கை 27 ஆக அதிகரித்தது என்று இந்திய வானொலி அறிவித்தது.

## குண்டு வீச்சில் லொறி தப்பியது

தென்மராட்சி, ஏப். 30

எழுதுமட்டுவாழில் கடந்த சனியன்று வீதியால் சென்று கொண்டிருந்த லொறி ஒன்றின் மீது அவ்ரோ குண்டு வீச்சு தாக்குதலை நடாத்தியது. வீசப்பட்ட குண்டு அருகில் உள்ள தென்னந் தோட்டமொன்றில் வீழ்ந்து வெடித்ததில் ஆறு தென்னை மரங்கள் வேருடன் சாய்ந்து வீழ்ந்தன.

குண்டு வீச்சு நடந்த சமயம் இந்த லொறியில் பல பொது மக்கள் சென்று கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-117]

## காயங்களுடன் கிணற்றில் சடலம்

தென்மராட்சி, ஏப் 30

சாவகச்சேரி பெருங்குளம் பகுதி வயற்கிணறு ஒன்றில் வெட்டுக் காயங்களுடன் அழுகிய நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

சுமார் முப்பது வயது மதிக்கத்தக்க இந்த இளைஞரின் சடலம் சிதைந்து அடையாளம் காண முடியாத நிலையில் இருந்ததால் கிணற்றிலிருந்து வெளியே எடுக்கப்பட்டு அந்த இடத்திலேயே தகனம் செய்யப்பட்டது.

[உ-117]

## ஓய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கான மார்ச் மாத வவுச்சர்கள் தற்போதைய ஊரடங்கு நீக்கப்பட்டதும் தபாலில் சேர்க்கப்படும் என்று செயலக அதிகாரிகள் தெரிவித்தனர். [உ-3]

## தவறணைகள் நாளை பூட்டு

யாழ்ப்பாணம், ஏப் 30

மேதினத்தை ஒட்டி நாளை கள்ளுத் தவறணைகள் மூடப்பட்டிருக்கும்.

புதன்கிழமையன்று கள் கொள்வனவையும், விற்பனையும் நிறுத்தி அன்றைய உற்பத்தியை அடுத்த நாள் வியாழக்கிழமை கொள்வனவு செய்து விற்பனை செய்யுமாறு வட மாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது அங்கத்துவச் சங்கங்களைக் கேட்டுள்ளது. [அ]

## 11 ஆயிரம் வேட்பாளர்!

புதுடில்லி, ஏப் 30

இந்திய நாடாளுமன்றத்தின் 537 தொகுதிகளில் 11 ஆயிரத்துக்கு அதிகமான வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இறுதியான புள்ளிவிபரங்கள் மூலம் இதுதெரியவந்துள்ளது. [அ-எ]

## மேதின ஏற்பாடுகளும் இறுதி நேர ஒழுங்குகளும்

யாழ்ப்பாணம், ஏப் 30

★ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் நடத்தும் மேதின ஊர்வலம் ஆரம்பமாகும் மருதனார்மடம் சந்தியில் பெரிய அளவில் பந்தல்களும், அலங்கார வளைவுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

★ தாவடிச் சந்தியிலும் பெரிய அளவில் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

★ கொக்குவில் பகுதி மக்களும், பொது ஸ்தாபனங்களும் ஊர்வலம் வரும் பாதைகளைத் துப்புரவு செய்வதிலும், தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்து அலங்கரிப்பதிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

★ வட ஈழ கைவலுக் கைப்பணியாளர் சங்கத்தினர் இகை அலங்கரிப்பு தொழில் செய்யும் அனைவரையும் 1 ஆம் திகதி மருதனார்மடத்தில் ஆரம்பமாகவிருக்கும் ஊர்வலத்தில் பங்கு பற்றுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

★ வடமராட்சி கைவலுக் கைப்பணியாளர் சங்கத்தினர், தொழிலாளர்கள் அனைவரையும் மேதின ஊர்வலத்திலும், பொதுக்கூட்டத்திலும் காலை 9-00 மணிக்கு கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

★ வடபிராந்திய போக்குவரத்து சபையின் அனைத்து சாலை ஊழியர்களையும் 1ஆம் திகதி காலை 8-00 மணிக்கு முன் கோண்டாவில் சாலையில் சமுகமளிக்கும்படி தமிழ் பேசும் போக்குவரத்து ஊழியர் சங்கம் கேட்டுள்ளது.

★ மேதினக் கடமை சம்பந்தமான இறுதி அறிவித்தல்களைப் பெறுவதற்காக யாழ். மாவட்ட சிரேஷ்ட சாரணர்கள், திரிசாரணர்கள் இன்று பிற்பகல் 4 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

★ பனை - தென்னை அபிவிருத்தி ஒன்றியத்தால், மேதினத்தையொட்டி நடத்தப்பட்ட பனை ஏறும் போட்டி, குட்டான் இழைக்கும் போட்டி என்பவற்றின் இறுதிச் சுற்றுப் போட்டி இன்று காலை 9 மணிக்கு கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

★ லங்கா சிமெந்து நிறுவனத்தின் கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும், மேதின ஊர்வலத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு நாளை காலை 8 மணிக்கு சுன்னாகத்தில் உள்ள லங்கா சிமெந்து அலுவலகத்தில் சமுகமளிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

★ மேதின நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவது தொடர்பாக வங்கி ஊழியர்கள் இன்று முடிவு செய்வர். அதன் பொருட்டு இன்று காலை 8-30 மணிக்கு தத்தமது வங்கிகளில் சமுகமளிக்குமாறு, வங்கி ஊழியர்களை, தமிழீழ வங்கி ஊழியர் ஒன்றியம் கேட்டுள்ளது.

★ யாழ். மாவட்ட முறைசாராக் கல்விப் பிரிவுப் போதனாசிரியர்கள், மாணவர்கள், முதலுதவி நிலையங்களின் உறுப்பினர்களை நாளை காலை 8 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

[அ-த-68-69 51]

## தீவக மக்களுக்கு ஒன்பது முகாம்கள்

யாழ்ப்பாணம், ஏப். 30

தீவுப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தோருக்கென யாழ். நகரில் ஒன்பது முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ். செயலகம் மேற்கொண்ட மதிப்பீட்டின்படி தீவுப்பகுதியில் இருந்து 21 ஆயிரம் குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

தமது உறவினர்களின் வீடுகளில் தங்கியிருப்போர் தவிர்ந்த, சுமார் 2 ஆயிரத்து 135 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இந்த ஒன்பது முகாம்களிலும் தற்போது உள்ளனர்.

முகாம்களும் தங்கியிருப்போர் குடும்பங்களின் எண்ணிக்கையும் வருமாறு:-

★ சென். றோஸ் ச. ச. நிலையம் — 155

★ அடைக்கலமாதா கோயில் — 1,000

★ சென். ஜேம்ஸ் ம. வி — 125

★ திருவள்ளுவர் ச. ச. நி — 250

★ திருநெல்வேலி முத்துத்தம்பி ம. வி. — 100

நாவாந்துறை சென். மேரிஸ் ம. வி — 130

★ நாவாந்துறை சென். நிக்கலஸ் ம. வி. — 75

★ கொட்டடி நமசிவாய வித்தியாசாலை — 150

★ சன்மார்க்க ம. வி. — 150

இது தவிர, தீவுப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்தோர் அராலியிலும் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## நலன்களைக் கவனிக்க நடமாடும் சேவைப் பிரிவு

யாழ்ப்பாணம், ஏப். 30

தீவுப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த மக்களின் நலன்களைக் கவனிக்க என்று நடமாடும் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தில் இயங்கும் விசேட கருமபீடத்தில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சிவரத்தினமும், வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. என். தனபாலசிங்கமும் கடமையாற்றுகிறார்கள்.

அத்துடன் அங்கிருந்து இடம் பெயர்ந்த கிராம சேவையாளர்களைக் கொண்டு நடமாடும் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த சேவையின் கடமை [illegible] விருக்கும் பகுதிகளுக்குச் சென்று விவரங்களைச் சேகரிப்பதும் அவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. [அ-3]

## கோவிற் கேணியில் நீராடிய சிறுவன் பலி!

யாழ்ப்பாணம், ஏப். 30

கோவில் திருவிழாவையொட்டி தீர்த்தக் கேணியில் குளித்த சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி மரணமானான்.

வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலில் நேற்று பூங்காவனத் திருவிழா. அதனையொட்டி பல சிறுவர்கள், இளைஞர்கள் நீராடினர்.

கோவிலுக்குச் சென்ற தமது மகனைக் காணவில்லை என்று தந்தை மாலை 6 மணியளவில் அங்கு தேடிச் சென்றார். மகன் கேணியில் நீராடியதைக் கண்டதாகச் சில சிறுவர்கள் கூறினர்.

அதனைத் தொடர்ந்து சிறுவனைத் தேடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு அவன் மீட்கப்பட்டான். திருநெல்வேலி "சென்றல் நேர்சிங் ஹோம்", ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றபோது சிறுவனின் உயிர் பிரிந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது.

வண்ணார்பண்ணை சிவப்பிரகாசம் வீதியைச் சேர்ந்த மகேந்திரன் சங்கரதாஸ் [சங்கர்] என்ற 9 வயதுச் சிறுவனே நீரில் மூழ்குண்டு மரணமானவர் ஆவார். [அ]

## புளொட் உறுப்பினர்கள் மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 30

கடந்த ஞாயிறன்று வவுனியா தாண்டிக்குளம் காவலரணில் இருந்து சற்றுத் தூரம் முன்னால் வந்த புளொட் குழுவினர் அப்பகுதியில் கண்ணிகளைப் புதைக்க முயன்றனர்.

அச்சமயம் கண்ணி ஒன்று தவறுதலாக வெடித்ததில் புளொட் உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தார்.

## நீதிமன்றில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்கள் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளன என்றும்—

மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்க அவரது பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து மேல் விசாரணை ஜூன் மாதம் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

காமினி திஸநாயக்கா சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ஏ. எல். எம். அமீன் சட்டத்தரணிகள் குமார் பொன்னம்பலம் ரஜே பி எல் டி சில்வா ஆகியோர் ஆஜரானார்.

திரு. காமினி திஸநாயக்கா நீதிமன்றம் சென்றதும் அவருக்கு ஆதரவாக பலர் கோஷமிட்டனர் [உ-எ]

## நானாட்டான்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நானாட்டான் தாக்குதல் சம்பவத்தில் 25 படையினர் வரை உயிரிழந்தனர் என்றும்—

மேலும் 25 படையினரைக் காணவில்லை, என்றும் ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. [உ-எ]

## உத்வேகமும்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

துறையில் இழைக்கப்பட்ட அட்டூழியங்களை சித்தரிக்கும் ஊர்திகளும் பேரணியில் அவர்களுடன் சேர்ந்து செல்லும்.

பேரணியில் செல்வோருக்கு தாகசாந்தி அளிப்பதற்காக, சந்திகள் தோறும் விசேட பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மருதனாமடத்தில் ஆரம்பிக்கும் பேரணி காங்கேசன்துறை வீதி, தட்டாதெருச் சந்தி அரசடி வீதி ஆகியவை ஊடாக நல்லூரை அடையும். அங்கு மாபெரும் கூட்டம் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

ஊர்வலத்தையொட்டி குடாநாடெங்கும் சிவப்பு-மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. மேதின சித்தாந்தத்தை விளக்கும் சுலோகங்கள் கொண்ட பதாகைகள் எங்கும் கட்டப்பட்டுள்ளன.

போராட்ட சூழ்நிலையில் நடக்கும் சிறப்புமிக்க தொழிலாளர் எழுச்சி தினமாக நாளைய மேதினம் அமையும். [அ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில்: 04 - 08 - 1966

ஆண்டவன் பிடியில்: 17 - 03 - 1991

திதி: 30 - 04 - 1991 [செவ்வாய்க்கிழமை]

## அமரர் சிவபுரநாதர் சிவராசா

[சிவன்]

[இலங்கை மின்சார சபை, சுன்னாகம் பாதுகாப்பு ஊழியர்]

நாம் வாழ வழிகாட்டி,
கலங்கரை விளக்காய் ஒளி தந்து
திடீர் என அணைந்த
எம் அன்புத் தெய்வமே!

உம் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

அகால மரணமடைந்த எமது அன்புக் குழந்தையின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட இலங்கை மின்சார சபையைச் சேர்ந்தவர்களுக்கும், மற்றும் அனைவருக்கும் நன்றி கூறுகிறோம்.

தந்தை, தாய், சகோதரி, மருமகன்.

சங்கரத்தை, வட்டுக்கோட்டை. [16613]

# ஐ. நா. தூதரக வாகனத்தை புலிகள் கேடயமாகப் பயன்படுத்தவில்லை

## ஸ்ரீலங்கா வதிவிடப் பிரதிநிதி பிரதமருக்கு விளக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 30

''கடந்த சனியன்று தாண்டிக்குளத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகசம்பவத்தின்போது ஐ.நா. அகதிகள் தூதரக வாகனங்களை விடுதலைப் புலிகள் கேடயமாகப் பயன்படுத்தினர் என்று பிரசாரம் செய்யப்படுவது தவறு''

சம்பவம் நடந்த சமயம் அந்த இடத்தில் இருந்த ஐ. நா. அகதிகள் தூதரக இலங்கை வதிவிடப் பிரதிநிதி திரு. டபிள்யூ. டி. கிளரன்ஸ் இவ்வாறு பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளிடம் விளக்கிக் கூறியுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் பாதுகாப்புத்துறை அமைச்சரும் பிரதமருமான திரு. டி. பி. விஜேயதுங்காவிடமும் கூட்டுப்படைத் தலைமையக அதிகாரிகளிடமும் அவர் இதனை விளக்கிக் கூறியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு உத்தரவாதம் தந்ததன் பின்னர் தங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் சம்பவங்கள் முன்னரும் இடம்பெற்றிருக்கின்றன என்று சுட்டிக்காட்டியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஜெனிவாவில் உள்ள ஐ. நா. அகதிகள் தூதரக தலைமையகத்துக்கும் அவர் தகவல் தெரிவித்துள்ளார்.

இதேவேளை—

இந்தச் சம்பவத்தில் எரிந்த லொறியின் சாரதியான செல்வரத்தினம் இறந்துவிட்டார் என்று முதலில் வெளியான தகவல் தவறு என்றும்—

அவர் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-3]

## பாதுகாப்புத் தராவிட்டால் உணவு அனுப்ப முடியாது!

### ஐ. நா. தூதரகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 30

தங்களது பாதுகாப்பு உறுதிப் படுத்தப்படாவிட்டால் மடு அகதி முகாமுக்கு உணவுப் பொருள்களை ஏற்றிச் செல்வதை நிறுத்தி விடப் போவதாக அந்த முகாமை நிர்வகித்து வரும் ஐ. நா. அகதிகள் தூதரகத்தின் அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

மடு அகதி முகாமில் சுமார் 30 ஆயிரம் பேர் தங்கியிருப்பது தெரிந்ததே. [உ-5]

## 2 பிள்ளைகளும் மரணம்

அரியாலையில் சித்த சுவாதீனமுற்ற தந்தை வீட்டுக்குத் தீ வைத்ததில், கடும் எரி காயங்களுக்கு இலக்கான அவரின் இரு குழந்தைகளும் நேற்று அதிகாலை மரணமாகின. [உ-5]

## மாணவர் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஏப் 30

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் வலிகாமம், தீவகம் பகுதி உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் மாணவர் இயக்கத்தின் நல்லூர் யாழ். மாவட்டக் காரியாலயத்தில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறும். [உ]

## ஆசிரிய மாணவருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப் 30

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆகியவற்றின் ஆசிரிய மாணவர்களை இன்று காலை 10 மணிக்கு அந்தந்தக் கலாசாலைகளுக்கு தவறாது சமுகம் தரும்படி கலாசாலை அதிபர்கள் வேண்டியுள்ளனர். [உ]

## தமிழர் கைது

கொழும்பு, ஏப் 30

கடந்த இரண்டு மாதங்களாக மாத்தறை நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் முஹம்மத் முஸ்தபா என்ற பெயரில் தங்கியிருந்த ஆறுமுகம் மோகன் குமார் என்ற தமிழ் இளைஞனைப் பொலீஸார் கைது செய்துள்ளனர் [உ-எ]

## இ.தொ.காவின் மே தினத்தில் டிஸ்கோ சாந்தி

கொழும்பு, ஏப் 30

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஹட்டனில் நடத்தவிருக்கும் மேதின விழாவில் சினிமாப் பாடகர்களான டி. எம் சௌந்தரராஜன், வாணி ஜெயராம், பி. பி. ஸ்ரீனிவாஸ் ஆகியோருடன் தென் இந்திய நடிகர்களான ஆனந்தபாபு, டிஸ்கோ சாந்தி [illegible] இறங்கள் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. [உ-எ]

# மரண அறிவித்தல்கள்

## இராமுப்பிள்ளை கதிரேசு

நயினாதீவைச் சேர்ந்த இராமுப்பிள்ளை கதிரேசு 29-4-1991 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை — வள்ளியம்மை ஆகியோரின் மகனாரும், காலஞ்சென்ற இராமநாதர்—இராமாசி ஆகியோரின் மருமகனும், தையல்நாயகியின் அன்புக் கணவரும், திருமதி இராஜராஜேஸ்வரி விஜயரெத்தினம், நாகேஸ்வரன், திருமதி திருமங்கை மோகனதாஸ், செல்வராசன், நித்தியானந்தராசா, பேரின்பநாதன் ஆகியோரின் தந்தையாரும், விஜயரெத்தினம் [சோதி] மோகனதாஸ், மணிமேகலை, உமாதேவி ஆகியோரின் மாமனாரும், காயத்ரி, சத்திஜீ சாஜிஸ்ரீ, வைதேகி ஆகியோரின் பேரனாரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, நாகமுத்து ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை, பரமலிங்கம், சதாசிவம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 30-4-1991 செவ்வாய்க்கிழமை இன்று பிற்பகல் 3 00 மணியளவில் திருநெல்வேலியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும், தகவல்:

திருமதி தையல்நாயகி (மனைவி)
திருமதி இராஜராஜேஸ்வரி (மகள்)

கலாசாலை வீதி, திருநெல்வேலி. [16639]

## S. A. யோசவ்

திரு. S A. யோசவ் 28-4-91இல் காலமானார். இவர் திருமதி அன்னம்மா [பிள்ளையக்காவின்]யின் அன்புக் கணவரும், திருமதி பிலோமினா ஜெகராசா, திரு. அச்சிலிஸ் [S. S. P.] பொலிஸ் தலைமைக் காரியாலயம் கொழும்பு, திரு வியோப் போல் [K. S. A.] திரு. கலிஸ்ரஸ் [I C.R. C. யாழ்ப்பாணம்.] திருமதி X பேணடிற் ஆகியோரின் அன்புத் தந்தையும். காலஞ்சென்ற J. A. ஜெகராசாவினதும், திருமதி இந்திரா அச்சிலிஸ், திருமதி கொலஸ்ரிக்கா, வியோப் போல், திரு. C. F. சேவியர், திருமதி மேரிஜெசிந்தா கலிஸ்ரஸ் [சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியை] ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற மரியம்மா, S. A. சாலிஸ், திரு. சவிரிமுத்து [றெயில்வே] ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி சவிரிமுத்து ஆனாசிப்பிள்ளையின் மைத்துனருமாவார். அன்னாரின் நல்லடக்கம் இன்று [30-4-91] செவ்வாய் காலை 8-30 மணிக்கு 72A, றக்கா றோட் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித கொஞ்சேஞ்மாதா சேமக்காலையில் நடைபெறும், இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

72A, றக்காறோட், யாழ்ப்பாணம்.

தகவல் தருபவர்: கலிஸ்ரஸ் யோசவ் [16634]

# மரண அறிவித்தல்

## சந்திரகாசன் (சங்கர்)

மன்னாரை வசிப்பிடமாகக் கொண்ட பொன். மகேந்திரன் சந்திரகாசன் [சங்கர்] அவர்கள் அகால மரணமானார். அன்னார் பொன். மகேந்திரன் [மன்னார் றேடர்ஸ் MTM] — நந்தினி தம்பதியினரின் அன்பு மகனும், சிந்துஜா, அனோஜா, நிரோஜா] அஜந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மு. க. சுப்பிரமணியம், இளையதம்பி [பொன்னுத்துரை] ஆகியோரின் அன்பு பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

24/3, சிவப்பிரகாசம் றோட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்: பொன். மகேந்திரன் [தகப்பன்] [[16532]

## நவரத்தினம் பரராசசிங்கம்

[ஆயுள்வேத வைத்தியர்]

வட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்த நவரத்தினம் பரராசசிங்கம் [ஆயுள்வேத வைத்தியர்] காலமானார். அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், தேவமலர் விநாயகமூர்த்தி. வேலாயுதம் [இளைப்பாறிய விவசாய போதனாசிரியர்], சரோஜினிதேவி சண்முகநாதன் [கிராமசேவையாளர், சங்கானை மேற்கு], ஜெயபாலசிங்கம், கமலாதேவி இராஜேந்திரா, நிர்மலாதேவி [விவசாய இலாகா], சகுந்தலாதேவி [துறைமுக அதிகாரசபை] ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [30-04-91] காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்; இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
T. V. விநாயகமூர்த்தி,
T, V. சண்முகநாதன்
K இராஜேந்திரா
[மருமக்கள்]

[16531[

## ஐயாத்துரை இராஜநாயகம் (கிளி)

ஐயாத்துரை இராஜநாயகம் காலமானார். இவர் காலஞ்சென்ற ஐயாத்துரை — கமலம் தம்பதியினரின் அன்பு மகனும், கனகலட்சுமியின் அன்புக் கணவரும், சாந்தி, ராஜி தீபா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான இராசகோபால், மகேஸ்வரி. தேவராசா, செல்வரெத்தினம் ஆகியோரினதும், சுப்பிரமணியம் [சின்னராசா], சுந்தரலிங்கம் [குஞ்சன்], சு. பஞ்சரதம், து. சந்திரமலர் ஆகியோரின் இளைய சகோதரரும், திரு. ச. நடராஜா, திருமதி ந செல்லம்மா ஆகியோரின் மருமகனும், ந இராஜவேல் [நோர்வே], ந சக்திவேல், காலஞ்சென்ற ந. நிதிவேல் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் [30-04-91] இன்று செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: ந. சக்திவேல் [மைத்துனர்]

[16530]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/3 இல் உள்ள அச்சகத்தில் 30 - 04 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org